**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். 17ம் பிரதிவாதி ஆஜர். 2 முதல் 9, 14, 16, 18, 19, 20 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 2, 3, 4, 20 பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 6 முதல் 9, 14, 16 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

அ.வ.எண்.932/2015

பி.வா.சா.2 சாந்தி (எ) கிருஷ்ணசாந்தி, க/பெ.சேகர்

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

1. நான் கிரயம் பெற்ற 2 கிரயங்களும் பி.வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்களை பவர் ஏஜண்ட் மூலமாக தான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். அந்த கிரய ஆவணங்களின் உரிமையாளர்களை நான் கண்டோ, பார்த்தேனா என்றால் இல்லை. அந்த கிரய உரிமையாளரிடமிருந்து ரசீது எதுவும் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்கள் ஒரே நாளில் கிரயம் செய்யப்பட்டது என்றால் சரிதான். செல்வராஜ், சிவசண்முகம், கதிர்வேல், தினேஷ்குமார் ஆகிய 2 முதல் 5 பிரதிவாதிகளும் மற்றும் வாதியாகிய நவீனா ஆகியோர்கள் 10.07.1998 பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.1 ஆவணமான பாககிரயத்தில் நான் கிரயம் பெற்றதாக சொல்லும் சர்வே எண்.269/3ல் உள்ள 35 செண்ட் பாகம் ஏ அட்டவணை சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதால் வாதிக்கும் அதில் பாகம் உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

4. வா.சா.ஆ.12 ஆவணத்தில் உள்ள பக்கம் 4ல் சாட்சி கையொப்பமாக 3ம் பிரதிவாதி செல்வராஜ் கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். இந்த கிரயப்பத்திரத்தில் 2ம்பிரதிவாதி சிவசண்முகத்திடம் கையொப்பம் எதுவும்

வாங்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.269/4 ல் உள்ள 65 செண்ட் பாகம் வாரணாசி கவுண்டருக்கு எப்படி பாத்தியம் என்பதற்கான ஆவணங்களை பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.12ல் பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். பாகம் பிரியாத கூட்டுக்குடும்ப சொத்தில் ஒரு கூட்டு பங்குதாரர் மற்ற கூட்டுப்பங்குதாரருக்கு பொதுவில் விடுதலை எழுதிக்கொடுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

6. சர்வே எண்.269/3, 4 ல் உள்ள 1 ஏக்கர் பாக பூமிகள் என் சுவாதீனத்தில் உள்ளது என்பதற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். லோன் வாங்கப்பட்டது. நான் சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்பதால் தான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. சர்வே எண்.269/3, 4ல் உள்ள 1 ஏக்கர் பாக பூமி 1ம் பிரதிவாதிக்கு உரிமை பாத்தியம் உள்ளது என்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியும், 2 முதல் 4 பிரதிவாதிகளும் ஏற்படுத்திக் கொடுத்துள்ள பவர் பத்திரங்களும் அதனடிப்படையில் ஏற்படுத்திக்கொடுத்துள்ள கிரய ஆவணங்களும் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

8. 1ம் பிரதிவாதியான வாரணாசி கவுண்டர் குடும்ப கர்த்தா என்ற முறையில் குடும்ப அவசிய செலவுக்காக கிரய ஆவணங்களை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது பெயரில் ஏற்பட்டுள்ள பி.வாசா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ–12 வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வாதியையும், 5ம் பிரதிவாதியையும் 2ம் பிரதிவாதி தான் பராமரித்து வந்தார் என்று நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

9. 18, 19 பிரதிவாதிகள் எனது பெயரில் ஏற்படுத்திக்கொடுத்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால்

சரியல்ல. நான் நல்லெண்ண கிரயதாரர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் உள்ள கிரய ஆவணங்களை ரத்துசெய்ய விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல.

10. தாவா சரியாக மதிப்பீடு செய்யவில்லை என்றாலும், உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்று சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவா காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற சொத்தை சேர்த்து வழக்கு தொடுக்க வாதிக்கு உரிமை இல்லை என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல.

5ம் பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பில் செய்த குறுக்குவிசாரணை முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
மறுவிசாரணை இல்லை.